# புதிய இதயம்!

(ஞாயிறு சிந்தனைகளும் புனிதர்களும்
தரம் 10 இற்கான வினா விடைகளும்)

**2015 கார்த்திகை**

**வெளியீடு:**

மறைக்கல்வி நிலையம்

யாழ்ப்பாணம்.

## 8.11.2015 பொதுக்கால 32ம் ஞாயிறு

**1 அரசர் 17:10-16 எபி. 9:24-28 மாற்கு 12: 38-44**

இன்றைய முதல் வாசகத்தில் சரெப்தா ஊர்க் கைம் பெண் பஞ்ச காலத்தில் தனக்கும் தனது பிள்ளைக்குமென்று வைத்திருந்த மாவைப் பயன்படுத்தி விருந்தாளியாக வந்த இறைவாக்கினர் எலியாவுக்கு அப்பம் சுட்டுக் கொடுக்கின்றார். எலியா உரைத்த வாக்கின்படி பானையிலிருந்த மாவு தீரவில்லை. கலயத்திருந்த எண்ணெய் குறையவில்லை (1அர. 17:6). இறைவனை முற்றுமுழுதாக நம்பிச் செயற்பட்ட அக் கைம்பெண் நிறைவாகப் போசிக்கப்பட்டார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு ஏழைக் கைம்பெண்ணின் எளிய காணிக்கையைப் பெரிதாகப் பாராட்டுகின்றறார். இயேசுவின் இறையாட்சிப் பணிக்குத் தடையாக இருந்த யூதத் சமயத் தலைவர்களுள் மறைநூல் அறிஞரும் அடங்குவர். இவர்கள் மக்களிடையே தங்கள் சுய நலத்துக்காக மறைநூலை விளக்கியவர்கள். வெளிப்படையாக செபத்தில் ஈடுபட்டு மக்களின் மதிப்பை நாடியவர்கள். இவர்களை இயேசு கடுமையாக விமர்சனத்துக்கு உட்படுத்துகிறார்.

எருசலேமில் யூதத் தலைவர்களின் சுயநலப்போக்குகளை வெளிப்படுத்துகின்ற இன்றைய நற்செய்தி வாசகமனது ஓர் ஏழைக் கைம்பெண்ணின் தியாகச் செயலோடு முடிவடைகின்றது. பரிசேயர், மறைநூல் அறிஞர், குருக்கள் ஆகியோரின் பகட்டுக்கும் மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் முறைக்கும் நேர்மாறாக ஓர் ஏழைக் கைம்பெண் தியாகச் செம்மலாகக் காட்டப்படுகிறார். கைம் பெண்கள் யூத மரபுப்படி ஒதுக்கப்பட்டவர்கள். இங்கு இயேசு குறிப்பிடும் பெண் ஏழையாகவும் இருந்தார்.

மறை நூல் அறிஞர்களையும் கைம்பெண்ணையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மறைநூல் அறிஞர் தற்பெருமை கொண்டிருந்தனர். போதிப்பதை வாழ்க்கையில் கடைப்பிடிக்கவில்லை. மிதமிஞ்சிய பொருளாசை கொண்டிருந்தனர். தமது பண பலத்தை செல்வர் அம்பலப்படுத்தினர். ஆனால் கைம் பெண்ணோ தாழ்மையுள்ளம் படைத்த வளாய் இருந்தாள். நன்மை செய்வதில் பிரமாணிக்கமாய் இருந்தாள். தன்னுடையதெல்லாவற்றையும் அள்ளிக் கொடுத்தாள். மற்றவர்கள் தம்மிடம் இருந்தவற்றிலிருந்து கொடுத்தனர். அவளோ தன்னிடம் இருந்த அனைத்தையுமே கொடுத்தாள்.

இயேசு இக் கைம்பெண்ணின் ஊடாக தாழ்த்தப்பட்டோருக்காக குரல் கொடுக்கின்றார். நிறை குறைந்தாலும் குணங்குன்றாக் கிறீஸ்தவர்களாக வாழவும், வெளியரங்க செயற்பாடுகளிலும் பார்க்க உள்ளரங்க மனப் போக்கிற்கு முக்கிய இடம் கொடுக்கவும் வெளிவேடத்தனமாக எம் கிறீஸ்தவ செயற்பாடுகள் அமைந்துவிடக்கூடாது என்றும் இன்றைய நற்செய்தி வாசகம் அறைகூவல் விடுத்துச் செல்கின்றது.

ஆகவே நாம் இறைவனிடமிருந்து பெற்றுவரும் கொடைகளுக்கு ஈடாக எமது அன்பை, சேவையை, இதயத்தை, துன்ப துயரத்தை, வெற்றியை, தோல்வியைத் தாராள மனதுடன் இறைவனுக்கு அர்ப்பணிப் போமாக. ஆமென்.

**—சகோ. க. பெனற் சிங்கர் அ.ம.தி.**

## 15.11.2015 பொதுக்கால 33ம் ஞாயிறு

**தானியேல் 12:1-3 எபி. 10:11-14- 18 மாற்கு 13: 24-32**

திருவழிபாட்டு ஆண்டின் இறுதி நாட்களில் பயணிக்கும் எமக்கு இன்றைய வாசகங்கள் எம் வாழ்வின் எல்லைகளை நோக்கியவாக

அமைகின்றன. அதாவது முடிவின் காலம் பற்றியும் பாவிகளின் விடுதலையையும் இறையன்பையும் வெளிப்படுதுவதாய் அமைந்த கிறிஸ்துவின் மேலான பலியின் மேன்மையைப் பற்றியும் இறுதியில் மனுமகனுடைய இறுதிவருகை பற்றியும் வாசகங்கள் வெளிப்படுத்துகின்றன.

முதலாளி ஒருவர் தனது வயற் காணியில் வேலை செய்வதற்கு ஒரு வேலை ஆளை நியமிக்கின்றார். ஆரம்பத்திலேயே முதலாளி அவரிடம் “நீ எப்படி வேலை செய்வாயா?” என்று கேட்டபொழுது, அந்த வேலையாள், “நான் காற்றிலும் மழையிலும் பயமேதுமின்றி உறங்குவேன்” என்று முதலாளிக்கு மறுமொழி கூறினான். முதாளியோ ஒன்றும் புரியாதவராய், வேறு எவரும் வேலைக்குக் கிடைக்காததால் அவரையே தனது வயற் காணியில் வேலை செய்ய அமர்த்தினார். வயல் விதைத்து, பசளையிட்டு, தானியங்கள் எல்லாம் நன்றாகப் பலனளிக்கும் தறுவாயில் இருந்தன. அறுவடைக்கு இரண்டு மூன்று நாட்களே இருந்தன. முதலாளியின் எதிர்பார்ப்போ பன்மடங்காயிருந்தது. திடீரென அன்றிரவு யாருமே எதிர்பார்த்திராதவாறு பெருங் காற்றும் மழையுமாக இருந்தது. அயல்வீட்டார் அனைவரும் தம் தானியங்களைப் பாதுகாக்க விரைந்து ஓடி செய்வதறியாது தத்தளித்தனர். முதலாளியோ தனது முதிர்ந்த வயதில் ஒன்றும் செய்ய இயலாதவராய் தனது எதிர்பார்ப்புகளெல்லாம் முறியடிக்கப்பட்ட நிலையில் இரவு முழுவதும் நித்திரையின்றி அவதிப்பட்டார். வேலையாளோ கவலையின்றி இரண்டு போர்வைகளால் மூடிக் கொண்டு நல்ல நித்திரையாய் இருப்பதைக் கண்டு முதலாளி மேலும் கவலைப்பட்டார்.

ஆனால், மறுநாள் காலையில் தன்னுடைய வயலுக்குச் சென்ற முதலாளி தனது பயிர்களுக்கு மட்டும் எதுவித பாதிப்பும் ஏற்படாதிருப்பதை அவதானித்த முதலாளி பெரும் ஆச்சரியத்திற்கு உள்ளாகி, உளப் பூரிப்படைந்தார். அப்போதுதான் “நான் காற்றிலும்

மழையிலும் பயமின்றி நன்றாக உறங்குவேன்'' என்ற வேலையாள் கூறிய வார்த்தைகள் முதலாளிக்கு அர்த்தத்தைக் கொடுத்தன. ஏனெனில் எக்காலத்திற்கும் எல்லா அசௌகரியங்களுக்கும் ஏற்றாற்போல, அவன் பயிர்களைப் பாதுகாக்கச் செய்ய வேண்டியதெல்லாவற்றையும் தகுந்த விதமாக ஒவ்வொரு நாளும் செய்துவருவது வழக்கமாக இருந்தது.

ஆம், அன்பர்களே! கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோ, எமது வாழ்வின் முடிவோ, நாம் எவரும் அறியாத விடயமாகும். அது எமது பரலோக தந்தைக்கு மட்டுமே தெரிந்த விடயம் என்று இன்றைய இறைவாசகங்கள் தெளிவுபடுத்துகின்றன. எனவே, கிறிஸ்துவின் உன்னதமான சிலுவைப் பலியினால், அவரது விலைமதிப்பில்லாத் திரு இரத்தத்தினால் கழுவப்பட்டுள்ள நாம் அருள்நிலையில் அனுதினமும் வாழ அழைக்கப்படுகின்றோம். முடிவு என்ற ஒன்று எப்போது வந்தாலும் காற்றிலும் மழையிலும் அமைதியிலிருந்த வேலையாளைப் போல, ஆண்டவரைச் சந்திக்க எப்போதும் தயார் நிலையிலிருக்க, கிறிஸ்துனின் கல்வாரி அன்பு பலம் அளிப்பதாக.

**– சகோ. சே.ஜஸ்டின்ராஜா, அ.ம.தி.**

## 22.11.2015 கிறிஸ்து அரசர் பெருவிழா

**தானியேல் 7:13-14 'தி.வெ. 1:5-8 யோவான் 18: 33-37**

இறை இயேசுவில் பிரியமான சகோதரர்களே!

இன்று திருச்சபை அன்னையானவள் கிறிஸ்து அரசர் பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றாள். இன்றைய மூன்று வாசகங்களும் கிறிஸ்து அனைத்து உலகின் அரசர், அவரது ஆட்சிக்கு முடிவே இராது, அவரது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல போன்ற கருத்துக்களைச் சுட்டி நிற்கின்றன. இயேசு இஸ்ராயேல் மக்களினதும்

புறவினத்தாரினதும் பாவிகளினதும் புறம் தள்ளப்பட்டவர்களினதும் அரசராக தம் தந்தையின் அரியணையில் வலப்புறமிருந்து ஆட்சி செய்வார். அவரது ஆட்சி எல்லா அடிமைத்தனங்களையும் தகர்த்து எறியக்கூடியது, சாத்தானின் கட்டுக்களை அவிழ்க்கக் கூடியது, பாவி களை மனம் மாற்றக் கூடியது. யார் யார் எல்லாம் இயேசுவின் குரல் ஒலியைக் கேட்கின்றார்களோ அவர்களுக்கு எல்லாம் இயேசு அரசராக இயங்குகின்றார். இயேசுவின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள் அனைவரும் பேரின்பம் பெற்று, விண்ணரசை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.

ஆகவே, இறை இயேசுவில் பிரியமானவர்களே! நாங்கள் எங்கள் மனிதப் பலவீனங்களிலும் உலக போக்குகளிலும் சிக்குண்டவர்களாக, பணம், பதவி, பட்டம், கௌரவம், தலைக்கனம், ஆணவம், அந்தஸ்து போன்றவற்றிற்கு அடிமைப்பட்டவர்களாக, ஏழைகளைத் துன்புறுத்தி இம்சைப்படுத்துபவர்களாக வாழ்வதை விடுத்து, இறையரசின் விழுமியங்களை எமதாக்கிக் கொள்வோம். அன்பு, இரக்கம், கரிசனை, தியாகம், மன்னிப்பு, விருந்தோம்பல், விட்டுக் கொடுத்தல், விழிப்போடும் விவேகத்தோடும் வாழ்தல் போன்ற இறைஅரசின் விழுமியங்களை வளப்படுத்தி இறை அரசில் இடம் பிடிக்க முனைந்திடுவோம். சமத்துவ, சகோதரத்துவ, சமதர்ம உலகினை உருவாக்கும் சிற்பிகளாகத் திகழ்வோம். இயேசு அரசரின் நிறைவான ஆசீர் உங்கள் அனைவர் மீதும் தங்குவதாக! ஆமென்.

**- சகோ. வே. அனுசியஸ், அ.ம.தி.**

## 29.11.2015 திருவருகைக் கால முதல் ஞாயிறு

**எரே. 33:14-16 1 தெச. 3 .12-4.2 லூக்கா 21.25-28.34-36**

இறை இயேசுவில் பிரியமான சகோதரர்களே!

இன்று திருச்சபை அன்னையானவள் திருவருகைக் கால முதல் ஞாயிறு தினத்தை முன்னிட்டுச் சிந்திக்க அழைக்கின்றாள். திரு-

வருகைக் காலம் என்பது இறையருளையும் பரிவன்பையும் ஒருங்கே அனுபவித்து கிறிஸ்துவின் பிறப்பு விழாவைக் கொண்டாடவும் அவரது மறு வருகைக்காக ஆயத்தம் செய்யவும் தூண்டுவிக்கும் காலமாகும். இறைவனும் மனிதனும் மனிதரும் மனிதனும் ஒருவரை ஒருவர் அருள் நிலையில் சந்திக்கும் காலமாகும். இன்றைய மூன்று வாசகங்களும் கிறிஸ்து அனைத்து உலகின் அரசர், அவரது ஆட்சிக்கு முடிவே இராது, அவரது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல போன்ற கருத்துக்களைச் சுட்டி நிற்கின்றன. இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கடவுளுக்கு உகந்த மக்களாய் எவ்வாறு வாழலாம் என்பது பற்றி தெசலோனிக்க மக்களுக்கு விளக்குகின்றார். “உங்கள்மீது நாங்கள் கொண்ட அன்பு வளர்ந்து பெருகுவதுபோல நீங்கள் ஒருவர் ஒருவருக்காகவும் எல்லோருக்காகவும் கொண்டுள்ள அன்பையும் ஆண்டவர் வளர்த்து பெருகச் செய்வாராக. இவ்வாறு நம் ஆண்டவர் இயேசு தம்முடைய தூயோர் அனைவரோடும் வரும்பொழுது நம் தந்தையாம் கடவுள் முன் நீங்கள் குற்றமின்றித் தூயவராயிருக்குமாறு அவர் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக” (1தெச. 3 .12-13).

இன்றைய நற்செய்தி வாசகம் புது வாழ்க்கை நெறியின் அவசியத்தை உணர்த்துகின்றது. இங்கு தீய வலைப் பின்னலானது குடிவெறி, களியாட்டம், இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலை ஆகிய மூன்று தேவையற்ற தன்மைகளை உள்ளடக்கியது. இன்றைய கால கட்டத்தில் இவை பல குடும்பங்களிலும் சமூகங்களிலும் குழப்பங்களை, பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருவதை அவதானிக்கலாம். எனவே இவை தொடர்பாக நாம் விழிப்பாகவும் விவேகமாகவும் நடந்துகொள்ளவேண்டும். அழிவுக் கலாச்சாரத்தின் உள்ளீடுகளை அறிந்தவர்களாய் நாளும் பொழுதும் அன்புள்ளவர்களாய், பண்புள்ளவர்களாய் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே, பின்வரும் நியமங்களை நடைமுறைப்படுத்த முனைவோம்:

1. குடிகாரக் கூட்டத்தோடு சேருவதைத் தவிர்த்துக் கொள்வோம்.
2. தனித்து, தாகத்தோடு, சோகக்தோடு இருப்பதைத் தவிர்த்துக் கொள்வோம்.
3. வீட்டுக் கொண்டாட்டங்களில் மது பாவனையை முற்றாகத் தவிர்ப்போம்.
4. குடிகாரர்களைப் பார்த்து, "குடிக்காதே, குடிக்காதே" என்று கூறுவதை விட்டு, குடிப்பதற்கான காரணிகளைக் கண்டறிந்து, சிகிச்சை வழங்க முற்படுவோம்.
5. அர்த்தமற்ற ஆடம்பரக் கொண்டாட்டங்களைத் தவிர்த்துக் கொள்வோம்.
6. கவலைகளால் எங்கள் உள்ளம் மந்தமடையாதவாறு காத்துக் கொள்வோம்.

**- வி.பி.**

## தரம் 10

### தவணை 3

### புதிய பாடத்திட்டத்திற்கான வினா விடைகள்

**தேர்ச்சி :** இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் :** தேசிய, சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக விளங்குகின்ற மனித வளங்களை அபிவிருத்தியடையச் செய்யும்போது தனியார் சொத்துக்களைச் செயற்றிறன்மிக்க வகையில் பயன்படுத்துவர்.

**பாடம் :** 20

**தலைப்பு :** விண்ணுலகில் குறையாத செல்வத்தைத் தேடிக்கொள் ளுங்கள்.

1. 7வது கட்டளை எது?
   களவு செய்யாதே.

2. 10வது கட்டளை எது?
   பிறர் உடைமையை விரும்பாதே.

3. வி.ப. 20 .17ன் படி பிறரது உடமைகளாக விளங்குபவை எவை?
   பிறர் மனைவி, அடிமை, அடிமைப் பெண், மாடு, கழுதை.

4. 7ம் 10ம் கட்டளைகளுக்கு எதிரான பாவங்கள் எவை?
   பிறருக்கு உரியவற்றை அநீதமான முறையில் வைத்திருத்தல், ஆசைப்படுதல்.

5. பெரிய குறிப்பிடம் 361ன் படி சொத்து தொடர்பாகத் திருச்சபையின் போதனையாக விளங்குவது எது?
   எல்லா மனிதருக்கும் தமது குடும்பத்தினரது பராமரிப்பிற்காக சொத்துக்களை வைத்திருக்க உரிமை உள்ளது என்பதே திருச்சபையின் போதனையாகும்.

6. பெரிய குறிப்பிடம் 361ன் படி சொத்துக்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? கடவுளால் படைக்கப்பட்ட செல்வங்கள் எல்லாம் பொது நலனுக்காகப் படைக்கப்பட்டமையால் அவை சமமா-கப் பகர்ந்தளிக்கப்படவேண்டும். ஒருவர் தனது சொத்துக்களை அயலவரின் நன்மைக்காகவும் பயன்படுத்த வேண்டும்.

6. 1. கொரி. 6:10ன் படி இறையாட்சிக்கு உரிமையற்றவர்களாக் கருதப்படுபவர் யார்? திருடர், பேராசையுடையோர், குடிகாரர், கொள்ளையடிப்போர், பழி தூற்றுவோர்.

7. பெரிய குறிப். 358ன் படி 7ம் 10ம் கட்டளைகளுக்கு ஏற்ப செய்யவேண்டியவை எவை?
அயலவரது உடைமைகளைப் பறிக்காமை, கடனை முறையாகத் திருப்பிக் கொடுத்தல், வியாபாரத்தில் நேர்மையைக் கடைப்பிடித்தல், தொழிலாளருக்குத் தகுந்த சம்பளம் வழங்கல், பெறும் சம்பளத்திற்கேற்ப பணி செய்தல், ஒப்பந்தங்களுக்கு ஏற்பத் திட்டங்களை நிறைவேற்றல், பிறரது சொத்துக்களைக் கண்டெடுத்தால் மீள் கொடுத்தல்.

6. 7ம் கட்டளையானது எவ்வாறான செயல்களைத் தடை செய்கின்றது?
உரிமையாளரின் நியாயமான விருப்பத்திற்கு எதிராக அவரின் உடைமைகளைக் கவர்ந்துகொள்தும் பயன்படுத்துவதுமாகிய திருட்டை 7ம் கட்டளை தடை செய்கின்றது.

7. ஏழைகள் மட்டில் தனிப்பட்ட அன்பிற்குத் தெளிவான சாட்சிகளாக விளங்குபவை எவை?
ஆன்மாவையும் உடலையும் சார்ந்த இரக்க செயல்கள், பிறரன்பு நிறுவனங்கள்.

8. ஏழைகள் மட்டில் அன்பு கொள்ள எம்மைத் தூண்டுபவை எவை? பேறுபெற்றோர் பற்றிய இயேசுவின் போதனை, ஏழைகள்மீது எப்போதும் அக்கறை கொண்ட இயேசுவின் எடுத்துக் காட்டான வாழ்வு.

9. சொத்துக்கள் தொடர்பாக தூய பவுல் எத் திருமுகத்தினூடாக விளக்குகின்றார்?

எபேசியர் 4:28.

**தேர்ச்சி :** இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் :** உண்மைக்குச் சான்று பகர்ந்து நேர்மையான வாழ்வு வாழ்வர்.

**பாடம் :** 21

**தலைப்பு :** உண்மையுள்ளவர்களாக வா[illegible]

1. தி.ப. 5.1–11ன் படி தூய ஆவியைப் சோதிக்கத் துணிந்த இரு நபர்கள் யாவர்?
   அனனியா, சப்பிரா.

2. அனனியா, சப்பிராவின் கதையைக் கூறும் திருவிவிலியப் பகுதி எது?
   தி.ப. 5: 1–11.

3. அனனியா, சப்பிராவின் கதை எமக்கு எதை வலியுறுத்துகின்றது?
   இறைவனுக்கு எதிராகப் பொய்ச் சாட்சி சொல்பவர்களுக்குப் பயங்கரமான தீர்ப்பு கிடைக்கும்.

4. 8ம் கட்டளை எது?
   பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே (வி.ப. 20:16).

5. பழைய எற்பாட்டின்படி உண்மைக்கு எல்லாம் ஊற்றாக விளங்குபவர் யார்?
   இறைவன்.

6. 8ம் கட்டளை மூலம் கூறப்படுவது யாது?

உண்மையைக் கடைப்பிடித்தல், உண்மைக்குச் சான்று பகிர்தல்.

7. நாம் உண்மையுள்ளவர்களாக வாழ வேண்டும் எனின் என்ன செய்ய வேண்டும்?
எப்பொழுதும் மனச் சான்றின் குரலுக்குச் செவிமடுக்க வேண்டும்.

8. உண்மைக்குச் சான்று பகர்வதில் முன்னுதாரணமாக விளங்குபவர் யார்?
இயேசு (யோவான் 18:7).

9. இரகசியங்களைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்கள் யார்?
அரசியல்வாதிகள், அரச பணியாளர்கள், படைவீரர், சட்டத் தரணிகள்.

10. உறுதிமொழியை மீறி இரகசியத்தை வெளிப்படுத்துவதால் ஆபத்தை எதிர்கொள்வோர் யார்? தகவல்களை வழங்கியவர்கள், தகவல்களைப் பெற்றுக்கொண்டவர்கள், வேறு நபர்.

11. பின்வருவனவற்றிற்குச் சந்தர்ப்பம் கூறுக:
    1. "அனனியா, நீ நிலத்தை விற்ற தொகையின் ஒரு பகுதியை உனக்கென்று வைத்துக் கொண்டு தூய ஆவியாரிடம் பொய் சொல்லும்படி சாத்தான் உன் உள்ளத்தை ஆட்கொண்டது ஏன்?"

    2. "பின்பு ஏன் இச்செயலுக்கு இடமளித்தாய்? நீ மனிதரிடம் அல்ல கடவுளிடமல்லவா பொய் சொன்னாய்?"
    பேதுருவால் அனனியாவிற்குக் கூறப்பட்டது.

    3. "நிலத்தை இவ்வளவிற்குத்தானா விற்றீர்கள்? தூய ஆவியாரைச் சோதிக்க நீங்கள் உடன்பட்டது ஏன்?" பேதுருவால் சப்பிராவிற்குக் கூறப்பட்டது.

4. "அரசர் என்று நீர் சொல்கிறீர்? உண்மையை எடுத்துரைப்பதே எனது பணி."

இயேசுவால் பிலாத்துவிற்குக் கூறப்பட்டது.

**ஆசிரியை F. J. றினோல்டா, யாழ்ப்பாணம்.**

## கார்த்திகை 01
## அனைத்துப் புனிதர்கள் பெருவிழா

இன்றைய நன்நாளிலே திருச்சபையானது எல்லாப் புனிதர்களையும் ஒருங்கிணைத்து விழா எடுத்து அனைத்துப் புனிதர்கள் பெருவிழாவைக் கொண்டாடுகின்றதது. எல்லோரும் நல்லவரே என்பது எனக்குப் பிடித்த எண்ணமாகும். எல்லோரையும் நல்லவர்களாக வாழவைப்பது இறைவனின் விருப்பமாகும். இதனை ஏற்புடையதாக்கி எல்லோரையும் நல்லவர்களாக வாழவைக்கும் வல்லமை இறைவனிடம் உள்ளது என்றால் அது மிகையாகாது. புனிதர்கள் யார்?

இறைவனால் ஈர்க்கப்பட்டு தாமும் நல்லர்களாக வாழ்ந்ததோடு ஏனையோரையும் நல்லவர்களாக வாழவைக்க அர்ப்பணிப்போடு தம்மைத் தாரைவார்த்துக் கொடுத்தவர்களே புனிதர்களாவர்.

இறைவனையும் மனிதரையும் இணைய வைத்து நிறை வாழ்வுக்கு வித்திடும் முத்துக்களே புனிதர்களாவர்.

உலக சொத்துக்கு இரையாகாது இறைதேடலில் கரைகாண முற்பட்டு நிறை இன்பம் பெற்றவர்களே புனிதர்களாவர்.

மனிதத்தை மலரவைக்கும் புனிதத்தை வாழ்வின் வடிவாக்கி மிளிரும் மெழுகுவர்த்திகளே புனிதர்களாவர்.

எரிந்து எரிந்து வெளிச்சத்தைக் கொடுப்பதே இவர்களது இயல்பாகும்.

கொடுத்துக் கொடுத்து தம்மைக் குறைத்துக் கொள்வதே இவர்களது மரபாகும்.

இல்லாமை இல்லாத நிலைவேண்டி, எல்லாரும் எல்லாமே பெறத்தூண்டி, நல்லோராய் வாழ்ந்துவிட்ட இப்புனிதர்கள் என்றும் இறை ஈர்ப்புக்களாய், இறைப் பூக்களாய் மலர்ந்தவர்களே ஆவர்.

இவர்கள் வாழ்வில் எத்தனையோ இடர்பாடுகளை எதிர்கொள்ள நேர்ந்தாலும் இறுதிவரையும் மனத்தளர்வு அடையாமல் இறைவனையே இறுகப்பிடித்தவர்களாய் இறை மனித நம்பிக்கையில் வலுவூட்டம் பெற்று விளங்கினார்கள்.

இவர்கள் பரஸ்பர அன்புப் பரிமாற்றத்தில் பலம் கொண்டவர்களாய், நடமாடும் தெய்வங்களாய், மனித இதயங்களில் நீங்கா இடம் பிடித்தவர்களாய் திகழ்ந்தார்கள்.

இறைவனால் இயக்கப்பட்ட இவர்களது வாழ்க்கை வரலாறு இந்நூலை வாசிப்போரின் வாழ்க்கையில் மாற்றத்தைத் தோற்றுவிக்கும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

இவர்களின் அனுபவங்களைச் சுவைப்பதால் உதயமாகும் புதிய வாழ்வில் மகிழ்ச்சி வெள்ளம் தானாகப் பெருக்கெடுத்தோடும்.

இயேசுவின் வார்த்தையினை வாழ்வாக்கி, மலைப் பொழிவில் முன்மொழியப்பட்ட எட்டுப் பெறுபேறுகளையும் ஒருங்கே வெளிக்காட்டி, மகிழ்வித்து மகிழ்வுறும் நிறைவாழ்வு வாழும் இறைமனிதர்களாக

புனிதர்கள் விளங்குகின்றார்கள். இவர்களோடு இணைந்து நாமும் இறைவனை மகிமைப்படுத்தி மகிழ்வுற முன்வருவோம். நல்லதைக் கேட்டு, நல்லதைப் பேசி, நல்லதைச் செய்யும் புனித சூழலை உருவாக்க இரவும் பகலும் அயராது உழைப்போம். மனிதத்தை மதித்து, மனித மாண்பினை நேசிக்கும், சமூகச் சீர்கேடுகளைக் களைந்து சமூக மேம்பாட்டினைத் தோற்றுவிக்கும் உத்தமர்களின் வலைப்பின்னலை வலுப்படுத்த ஒன்றுகூடி, அனைத்துப் புனிதர்கள் பெருவிழாவிற்கு அர்த்தம் காணுவோம். புது வாழ்வுப் பயணிகளாய் வாழ்ந்து காட்டுவோம்.

## கார்த்திகை 02.
## இறந்த விசுவாசிகளின் நினைவுநாள்

இறந்த விசுவாசிகளின் நினைவுநாளை இன்று திருச்சபை கொண்டாடுகின்றது. இறந்தோருக்காக இறைவேண்டல் செய்வது யூத மரபிலும் ஆதித் திருச்சபையிலும் திட்டமிட்ட செயற்பாடாக இருந்துவந்தது. கார்த்திகை 2ம் திகதி இறந்த விசுவாசிகளின் நினைவு நாளைக் கொண்டாடுவது கி.பி. 16ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்தே ஆரம்பமானது. திருத்தந்தை 15ம் பெனடிற் (1914 – 1922) இத்திருநாளைப் பிரபல்யப்படுத்தினார் விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுகின்றதேயன்றி அழிக்கப்படுவதில்லை. மண்ணக வாழ்வின் உறைவிடம் முடிந்ததும் விண்ணகத்தில் நிலையான வீடு ஆயத்தமாயிருக்கின்றது. தலையாகிய கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். அவருடைய உறுப்புக்களாகிய நாமும் உயிர்த்தெழுவோம். "இப்போதோ, இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகின்றது. ஒரு மனிதர் வழியாகச் சாவு வந்ததுபோல, ஒரு மனிதர் வழியாகவே இறந்தோர் உயிர்த்தெழுகின்றனர்" (1கொரி. 15: 20-21).

“வீழ்ந்தோர் மீண்டும் எழுவர் என்பதை எதிர்பார்த்திருக்கவில்லை என்றால், அவர் இறந்தோருக்காக மன்றாடியது தேவையற்றதும் மடமையுமாகும். ஆனால், இறைப்பற்றுடன் இறந்தோர் சிறந்த கைம்மாறு பெறுவர் என்று அவர் எதிர்பார்த்திருப்பாரெனில், அது இறைப்பற்றை உணர்த்தும் தூய எண்ணமாகும். ஆகவே, இறந்தவர்கள் தங்கள் பாவத்தினின்று விடுதலை பெறும்படி அவர் அவர்களுக்காகப் பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுத்தார்” (2மக்கபேயர் 12: 44-45).

புனித 23ம் அருளப்பர் திருத்தந்தை குறிப்பிடுவதுபோல் இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு, நிறைவான மறையுண்மைகள் சார்பாகச் சிந்திக்கவைக்கின்றது. மறைந்துவிடக்கூடியவை எவை என்றும் நிலைபெற்றிருக்கக்கூடியவை எவை என்றும் எம்மைச் சீர்தூக்கிப் பார்க்கவைக்கின்றது. இறந்துபோன அனைத்து விசுவாசிகளையும் ஒருங்கே நினைவுகூர்ந்து, இன்று சிறப்பானமுறையில் அவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிநிற்கின்றோம்.

உலகப் புகழ்பெற்ற மன்னன் மகா அலெக்சாண்டர் சாகும்முன்னர் ஒரு வேண்டுகோள் விடுத்தார்:

“எனது இறப்பின் பின்னர் எனது மரண ஊர்வலத்தின்பொழுது என்னைத் தாங்கவிருக்கும் பேழையின் இருபக்கங்களிலும் இரண்டு துவாரங்கள் இட்டு, எனது கரங்களைத் துவாரங்களின் ஊடாக வெளியே போட்டு, உலகை வெற்றிகொண்டு, செல்வத்தில் மிதந்த மன்னன், மாவீரன் அலெக்சாண்டர் இப்போது வெறுங்கையனாய் போகின்றான் என்பதை உலகறிச் செய்யுங்கள். கொண்டுசெல்ல என்ன நாம் கொண்டுவந்தோம் என்பதை உலகம் அறிந்துகொள்ளட்டும்.”

எமது இதயக் கதவுகளை இறைஆசீருக்காகத் திறந்துவிடுவோம். கல்லறைகளைப் பூக்களால் அலங்கரித்து, மெழுகுதிரி கொழுத்து வதால் அல்லது வசதியானவர்கள், உறவினர்களுக்கு மட்டும் தானம் கொடுப்பதால் இறந்துபோன உறவினர் சார்பாக நமது கடமை முடிந்துவிட்டது என்ற முறையில் செயற்படுவதைத் தவிர்த்துக்கொள்வோம். மாறாக, அவர்கள் பெயரால் நன்மைகள் நிறையச் செய்வோம். ஏழைகளுக்குத் தாராள அன்போடு தர்மம்செய்வோம். தவம், உபவாசம், மன்னித்தல், தூயஅன்பை ஓரம்கட்டப்பட்டோரோடு பகிர்ந்துகொள்ளல், வழி தவறியவர்களுக்கு வாழ்வு வழங்கல் போன்ற நற்கிருத்தியங்களால் எம்மை இறைவனுக்கும் பிறருக்கும் ஏற்புடைய வர்களாக்குவோம். வான-தூதர் அனைவரும் புடைசூழ மானிடமகன் வரும்பொழுது கூறுவார்:

“ஆசி பெற்றவர்களே! வாருங்கள். உங்களுக்காக ஏற்பாடு செய் யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், நான் பசியாயிருந்தேன் உணவு கொடுத்தீர்கள் ; சுகமாயிருந்தேன் குடிக்கக் கொடுத்தீர்கள்; சிறையிலிருந்தேன்: என்னைத் தேடிவந்தீர்கள்” (மத்தேயு (25 34 – 36). இறைப் பேரின்பத்தில் நாம் நிதமும் பங்கெடுத்து பிறரும் பங்கெடுக்கத் தூண்டிகளாய் துலங்குவோம். எரிகின்ற திரிகளாய் வெளிச்சம் கொடுப்போம்.

## கார்த்திகை 03 புனித மார்த்தீன் டீ போறஸ் (1579 - 1639)

இவர் 1539, மார்கழி 9ம் திகதி பேரு நாட்டில் பிறந்தார். இவரது தந்தையார் ஸ்பானிய நாட்டு டொன் யுவான் டீ போறஸ் ஆவார். இவரது தாயார் ஆப்பிரிக்க நாட்டு அனா ஆவார். இவரது தங்கையின் பிறப்பின் பின்னர் தந்தையார் குடும்பத்தைவிட்டுப் பிரிந்துசென்றார்.

இவரது தாயார் வறுமையின் நிமித்தம் ஒரு மருத்துவரிடம் இவரைக் கையளித்தார். இவர் வளர வளர இரவில் கூடுதலான நேரத்தைச் செபத்தில் செலவிட்டார். 15 வயதில் இவர் டோமினிக்கன் மடத்தில் இணைந்துகொண்டார். 23 வயதில் இவர் டோமினிக்கன் சபையில் 3ம் நிலை அங்கத்தவராக வாக்குறுதி எடுத்தார். 24 வயதில் டோமினிக்கன் சபையில் அருட்சகோதரராக வாக்குறுதி எடுத்தார். இவரது மடம் கடனில் இருந்தபொழுது தன்னை விற்றுப் பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இவர் திவ்விய நற்கருணை முன்னர் முழந்தாள்படியிட்டு கூடுதலான நேரம் செபிப்பார். ஒருமுறை இரவு திவ்விய நற்கருணைமுன்னால் செபித்துக் கொண்டிருந்தபொழுது அவரிருந்த இடம் நெருப்பு பற்றி எரிந்தது. அவர் என்ன நடக்கின்றது என்று தெரியாமல் செபித்துக் கொண்டேயிருந்தார். 34 வயதிலிருந்து சாகும்வரை இவர் ஒரு மருத்தவசாலையின் பொறுப்பாளராகப் பணியாற்றினார். நோயாளி-களை மிகவும் கரிசனையோடு கவனித்தார். ஒருமுறை, வயதுபோன புண்களால் வருந்திய ஒருவரை இரு கரங்களால் அரவணைத்து தனது கட்டிலில் படுக்கவைத்தார். ஒரு அருட்சகோதரர் இதைக் கவனித்துவிட்டு, அவரைக் கண்டித்தார். அப்பொழுது மார்த்தீன் டி போறஸ், “எனது அன்புச் சகோதரரே! துப்பரவைவிட காருண்யமே மேலாது” என்று கூறி பேரன்போடு வாழவேண்டியதன் அவசியத்தைப் புகட்டினார். அநாதைமடமும் சிறுவர்களுக்கான மருத்தவமனையும் கட்டி, ஏழைகள் சார்பாகச் சிறப்புப் பணியாற்றிய புனிதராக இவர் பிரசித்திபெற்றுவிளங்குகின்றார். இவர் மாமிசம் தவிர்த்து, கடின-மான நோன்பு, உபவாசம் போன்றவற்றை அனுசரித்தார். இவர் 1639, கார்த்திகை 16ம் திகதி இறையடி சேர்ந்தார். 1837ல் அருளாளர் பட்டம்

பெற்று 1962ல் புனித 23ம் யோவான் திருத்தந்தையால் புனிதர்பட்டம் பெற்று பல்லின மக்களதும் பல்லின ஒன்றிப்பினதும் பாதுகாவலராக மார்த்தீன் டி போறஸ் திகழ்கின்றார்.

## கார்த்திகை 16 ஆசாரத்திற்குரிய வெரோணிக்கா (1823 - 1900)

இவர் கொன்ஸ்சாந்துநோபிளில் அன்கிளிக்கன் பெற்றோருக்கு 2வது பிள்ளையாகப் பிறந்தார். ஓர் அண்ணனும் இரு தங்கையரும் இவரது உடன்பிறப்புக்களாவர். 1850ல் இவரும் இவரது ஒரு சகோ தரியும் பெற்றோருக்குத் தெரியாமல் கத்தோலிக்க திருச்சபையில் திருமுழுக்குப் பெற்றார்கள். இவர்கள் 1860ல் துறவறமடத்தில் இணைந்துகொண்டார்கள். 1861ல் இவர் மேரி வெரோணிக்கா என்னும் நாமத்தைச் சூட்டி, துறவற ஆடை அணிந்துகொண்டார்.

இவர் 1867ல் போவின் கார்மேல்சபையில் இணைந்துகொண்டார். அங்கு இறைவனோடு நெருக்கமான உறவை அனுபவித்த பின்னர், 1868 ஆடி 14ல் போவின் கார்மேல் சபையை விட்டு, பயொன் என்னுமிடத்தில் கார்மேல் அப்போஸ்தலிக்க சபையை ஸ்தாபிக்க முற்பட்டார். 1906ல் இவர் இறையடி சேர்ந்தார்.

## கார்த்திகை 22 புனித செசிலியா ( - 239)

இவர் றோமையிலுள்ள சிசிலியாவில் பிறந்தார். இவர் பாடகர்களின் பாதுகாவலியாக விளங்குகின்றார். புனித மரியன்னை நீங்கலாக திருப்பலியின் வசீகரப்பகுதியில் பெயர்சொல்லி மன்றாடப்படும் ஏழு பெண்களில் ஒருவராவார். திருச்சபையின் மறைசாட்சிகளில் பிரசித்தி பெற்ற புனிதராக புனித சிசிலியாவின் திருநாள் கி.பி. 4ம் நூற் றாண்டிலிருந்து கொண்டாடப்படுகின்றது. புனித சிசிலியாவின்

பெயராலே உரோமையில் 5ம் நூற்றாண்டில் ஒரு பேராலயம் எழுப்பப்பட்டது.

றோமையின் மாண்புமிகு பெண்ணான சிசிலியா, தனது கணவன் வலேறியன், சகோதரன் திபூசியஸ், றோமைப் போர்வீரன் மக்ஸ்சிமஸ் ஆகியோரோடு இணைந்து மன்னர் அலெக்சாண்டர் செவோஸ் காலத்தில் கி.பி. 230ம் ஆண்டளவில், மறைசாட்சியாக மரணத்துக்குள்ளானார். 1599ம் ஆண்டு, இவரது கல்லறை திறக்கப்பட்டபொழுது, இவரது சடலம் அழியாது காணப்பட்டது. முதன்முதலாக அழியாநிலையில் காணப்பட்ட புனிதரின் சடலம் இவரதேயாகும்.

**- டேவிற் வி. பற்றிக், அ.ம.தி.**

வசந்தகம், சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.

உலக சொத்துக்கு இரையாகாது
இறைதேடலில் கரைகாண முற்பட்டு
நிறை இன்பம் பெற்றவர்களே புனிதர்கள் ஆவர்.
எரிந்து எரிந்து வெளிச்சம் கொடுப்பதே இவர்களது
இயல்பாகும், கொடுத்துக் கொடுத்து தம்மைக்
குறைத்துக்கொள்வது இவர்களது மரபாகும்.
இறுதி வரையும் இறைவனை இறுகப்
பிடித்தவர்கள் இவர்களே!